இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 108– திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 12 – புதன்கிழமை 27 நவம்பர் 2024 – சென்னை 116 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 108 : Thiruvalluvar Year - 2055 - Karthigai 12 - Wednesday 27 November 2024 - Chennai 116 Pages ₹ 5.00

## தலைமைச் செயலகத்தில் இந்திய அரசியலமைப்பு தினம் கொண்டாட்டம்!

# அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசித்து உறுதிமொழியேற்பு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ. 27 -

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75ம் ஆண்டை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசித்து உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.**

மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை உள்ளடக்கி இந்தியத்திருநாட்டினை வளமான பாதையில் முன்னெடுத்துச் செல்லும் ஓர் உன்னத உருவாக்கம், அண்ணல் அம்பேத்கர் வடிவமைத்துத் தந்த நமது அரசியலமைப்புச் சட்டமாகும். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 75வது ஆண்டினை சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. மேலும் நவம்பர் 26ஆம் தேதி தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும், உயர் நீதிமன்றம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை தலைமை அலுவலகங்கள், அனைத்து சார்நிலை அரசு அலுவலகங்கள், மாநில அரசின் அனைத்து அலுவலகங்கள், தன்னாட்சி அதிகார அமைப்புகள், நிறுவனங்கள், தன்னாட்சி அரசு நிறுவனங்கள், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்க வேண்டும் என முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டிருந்தார். அதன்படி, சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75ம் ஆண்டை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகப்புரையை,



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (26.11.2024) தலைமைச் செயலகத்தில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75வது ஆண்டு நாளையொட்டி இந்திய அரசமைப்பு முகப்புரை வாசிக்கப்பட்டது. இந்நிகழ்வில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**இந்திய மக்களாகிய நாம் இந்திய நாட்டினை இறையாண்மையும், சமதர்மமும், சமயச்சார்பின்மையும், மக்களாட்சி முறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும், அதன் குடிமக்கள் அனைவரும் சமூக, பொருளாதார, அரசியல், நீதி எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் சுதந்திரம்**

**சமுதாயப் படிநிலை, வாய்ப்பு நலம் இவற்றில் சமத்துவம் ஆகியவற்றை எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும் தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் சகோதரத்துவத்தை வளர்க்கவும், உள்ளார்ந்த உறுதியடையராய்,**

**நம்முடைய அரசியல் நிர்ணய சபையில் 1949 நவம்பர் 26 ஆம் நாளாகிய இன்று, இங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

**அன்பு, சமாதானம் மற்றும் சமத்துவம் நிறைந்த இந்தியாவை உருவாக்கிட அரசியலமைப்புச் சட்டத்தை நாம் பாதுகாக்க உளமார உறுதியேற்போம்.**

- என்று வாசித்து உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாசிக்க, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

---

### மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளுக்கும், எண்ணப்பட்ட வாக்குகளுக்கும் இடையே வித்தியாசம்! முறைகேடுகள் அம்பலம்!

## வாக்குச்சீட்டுகளைப் பயன்படுத்தி மறுதேர்தல் நடத்த எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல்!

### கூடுதலாக 5 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் எண்ணப்பட்டிருப்பது கண்டுபிடிப்பு!

மும்பை, நவ. 27 -

மகாராஷ்டிரா சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகளுக்கும், எண்ணப்பட்ட வாக்குகளுக்கும் இடையே பெரிய அளவில் வித்தியாசம் இருப்பது தெரியவந்துள்ளது.

288 தொகுதிகளைக் கொண்ட மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவைக்கு கடந்த 20ஆம் தேதி தேர்தல் நடைபெற்றது. இதன் முடிவுகள் 23ஆம் தேதி அன்று வெளியிடப்பட்டன. இதில், பா.ஜ.க., கூட்டணி வெற்றி பெற்றது. இந்நிலையில், தேர்தல் முடிவில் பல வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. குறிப்பாக பல இடங்களில் மக்கள் பா.ஜ.க.,வுக்கு வாக்களிக்கவில்லை என வெளிப்படையாக தெரிவித்தனர். ஆனால் அந்த இடங்களில் பா.ஜ.க., வெற்றி பெற்றதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், மகாராஷ்டிரா சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகளுக்கும், எண்ணப்பட்ட வாக்குகளுக்கும் இடையே பெரிய அளவில் வித்தியாசம் இருப்பது தற்போது தெரியவந்துள்ளது.

அதன்படி, தேர்தலின் போது 66 புள்ளி பூஜ்ஜியம் 5 சதவிகிதம் பேர், அதாவது 6 கோடியே 40 லட்சத்து 88 ஆயிரத்து 195 பேர் வாக்களித்ததாக தேர்தல் ஆணையம் வெளியிடப்பட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

3 கோடியே 6 லட்சத்து 49 ஆயிரத்து 318 பெண்களும், 3 கோடியே 34 லட்சத்து 34 ஆயிரத்து 57 ஆண்களும், ஆயிரத்து 820 மூன்றாம் பாலினத்தவரும் வாக்களித்திருந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்தது. இந்நிலையில், வாக்கு எண்ணிக்கையின்போது கூடுதலாக 5 லட்சத்து 4 ஆயிரத்து 313 வாக்குகள் எண்ணப்பட்டிருப்பது தற்போது தெரியவந்துள்ளது. இதன்மூலம் மகாராஷ்டிரா தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது உறுதியாகியுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

வாக்குச்சீட்டை பயன்படுத்தி மறு தேர்தல் நடத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

---

### பொது வாழ்வில் உள்ளவர்கள் கண்ணியத்தை கடைப்பிடிக்க வேண்டும்!

## அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்துக்கு உச்சநீதிமன்றம் கண்டனம்!

புதுடெல்லி, நவ. 27 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறித்து அவதூறாக பேசிய விவகாரத்தில், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்துக்கு உச்ச நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. பொதுவாழ்வில் உள்ளவர் கண்ணியத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்று சி.வி.சண்முகத்துக்கு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறித்து அவதூறாக பேசிய அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் மீது உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்நிலையில், தன் மீதான அவதூறு வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் சி.வி.சண்முகம் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர்,

சி.வி.சண்முகம் மீது அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். அதனடிப்படையில் தான் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். சி.வி.சண்முகம் மீது ஆதாரப்பூர்வமாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதால், அவரது மேல்முறையீட்டு மனுவை ஏன் தள்ளுபடி செய்யக்கூடாது? என்று நீதிபதிகள் வினவினர். மேலும், முதலமைச் சர் குறித்து அவதூறாக பேசியதற்காக சி.வி. சண்முகத்துக்கு நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர். பொது வாழ்வில் உள்ளவர்கள் கண்ணியத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்று சி.வி.சண்முகத்துக்கு நீதிபதிகள் அறிவுறுத்தினர். பின்னர் வழக்கை ஜனவரி மாதத்துக்கு ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

---

### பிறந்த நாள்: ‘குறிஞ்சி’ இல்லத்தில்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கழகத்தினர் - பொதுமக்களிடம் இன்று வாழ்த்துப் பெறுகிறார்!



---

## சென்னையில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, நவ. 27 –

தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் சென்னையில் இருந்து தென்கிழக்கே 830 கி.மீ. தொலைவில நிலை கொண்டுள்ளது.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக நேற்று வலுவடைந்தது. அதன் பிறகு அடுத்த 2 நாட்களில் வட மேற்கு திசையில் தமிழகம் இலங்கை கடற்கரையை நோக்கி நகரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் சூறாவளி புயலாக மாற வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது. இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறினால் அதற்கு ஃபெங்கல் புயல் என பெயரிடப்படும்.

